CC.No.441/2022 (JM.No.II, DHARMAPURI)

10.06.2026

சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)

PW– 1 : திரு.தனசேகர் , தலைமை ஆசிரியர்

முதல் விசாரணை

நான் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. ஆஜர் எதிரியை தெரியும். 01.07.2022 அன்று காலை 09.00 மணிக்கு நான் பணிபுரியும் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சென்று பார்த்தபோது smart class roomஇன் பூட்டை உடைத்து யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் அறையில் இருந்த 1. computer cpu, 2. 0.5 hp மின் மோட்டார், 3. portable amplifier ஆகியவற்றை அடையாளம் தெரியாத நபர்கள் திருடி சென்றுள்ளனர். இது சம்மந்தமாக அன்றையதினமே அதியமான்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்து, இது சம்மந்தமாக அவர்கள் விசாரணை செய்ததில் ஆஜர் எதிரி மற்றும் மற்றொரு நபரான இளவரும் சேர்ந்து திருடியதாக கைது செய்து காவல் நிலையத்தில் வைத்து இருந்தார்கள். அவர்களிடம் இருந்து 1. computer cpu, 2. 0.5 hp மின் மோட்டார், 3. portable amplifier காவலர்கள் கைப்பற்றினர். அந்த பொருட்கள் என்னிடம் காட்டினார்கள். எங்களுடைய பள்ளியில் இருந்து திருடப்பட்ட பொருட்களை அடையாளம் காட்டினேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 1. computer cpu, 2. 0.5 hp மின் மோட்டார், 3. portable amplifier பொருட்கள் தான் எதிரிகள் திருடி சென்றவைகள் ஆகும். அவை சான்று பொருட்கள் 1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த திருட்டு சம்பவத்தில் யார் ஈடுபட்டார்கள் என்று நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுத்த அன்றே காவல் நிலையத்தில் நான் எதிரியை பார்த்தேனா என்றால் இல்லை. போலிசார் சொன்னதின் அடிப்படையில் தான் எதிரியை பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். எங்கள் பள்ளியில் படித்த மாணவர்கள் தான் இந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்றாலும், வெளியில் தெரிந்தால் பள்ளியின் நற்பெயர் கெட்டுவிடும் என்பதாலும் எங்கள் பள்ளி மாணவர்கள் மீது புகார் அளிக்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. சம்பவ காலத்தில் எதிரி அடிக்கடி அத்துமீறி எங்கள் பள்ளி மைதானத்தில் கிரிகெட் விளையாடுவார் என்றாலும், அதுசம்மந்தமாக ஏற்கனவே வாய்வழியாக காவல் நிலையத்திற்கு தகவல் அளித்ததின் அடிப்படையிலும், போலிசார் மேற்படி திருட்டு வழக்கில் எதிரியை தொடர்புபடுத்தி வழக்கு தாக்கல் செய்ய ஏதுவாக என்னிடம் புகார் வாக்குமூலம் பெறப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.10 16:53:25 +0530

**CC.No.441/2022 (JM.No.II, DHARMAPURI)**

**10.06.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW– 2 : திரு.ஜெயகுமார் த/பெ தீர்த்தமலை**

**<u>முதல் விசாரணை</u>**

நான் நல்லம்பள்ளி தொடக்க பள்ளியில் உதவி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். பார்வை மகஜரிலுள்ள 1வது கையெழுத்து என்னுடையது. கடந்த 04.07.2020 அன்று மாலை 04.00 மணிக்கு வழக்கின் இவ்வழக்கின் சம்பவ இடமான நல்லம்பள்ளி தொடக்க பள்ளியை காவல் துறையினர் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் நானும், மகேஷ்வரி என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

04.07.2020 அன்று தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு விசாரணை சம்மந்தமாக நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. பார்வை மகஜரில் நான் பள்ளியின் முன்பு கையொப்பம் செய்தேன். நான் சொல்வது பொய் என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றாலும், நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் இட்டுவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.10 16:53:30 +0530

CC.No.441/2022 (JM.No.II, DHARMAPURI)

10.06.2026

சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)

PW– 3 : திருமதி.மகேஷ்வரி த/பெ கந்தையன்

<u>முதல் விசாரணை</u>

நான் நல்லம்பள்ளி தொடக்க பள்ளியில் சத்துணவு ஆயம்மாவாக பணிபுரிந்து வருகிறேன். பார்வை மகஜரிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையது. கடந்த 4 வருடங்களுக்கு முன்பு சுமார் மாலை 04.00 மணிக்கு வழக்கின் இவ்வழக்கின் சம்பவ இடமான நல்லம்பள்ளி தொடக்க பள்ளியை காவல் துறையினர் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் நானும், தொடக்க பள்ளி தொடக்கபள்ளி உதவி ஆசிரியரும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

வழக்கு விசாரணை சம்மந்தமாக நான் காவல் நிலையத்திற்கு சென்றேன். பார்வை மகஜரில் நான் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் செய்தேன். என்னுடன் கையொப்பம் செய்தவரும் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான்.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.10 16:53:35 +0530